
உ
சிவமயம்



வெள்ளாம் முள்ளியவாய்க்கால் முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும்,
கொழும்பு வெள்ளவத்தை ஸ்ரேசன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர். வைத்தியகலாநிதி முருகர் நல்லையா ஸ்ரீஸ்கந்தராஜா

(மகப்பேற்று பெண் நோயியல் வைத்திய நிபுணர்)
அவர்களின் சிவபதப்பேறு குறித்த 31ம் நாள்



# நினைவுமலர்

## 10.04.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



வெள்ளாம் முள்ளிவாய்க்கால் முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும்,

கொழும்பு வெள்ளவத்தை ஸ்ரேசன் வீதியை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர்

## வைத்தியகலாநிதி

# முருகர் நல்லையா ஸ்ரீஸ்கந்தராஜா

MBBS, MSOG, FCOG, (SL)

(மகப்பேற்று பெண் நோயியல் வைத்திய நிபுணர்)

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த 31ம் நாள்

# நினைவுமலர்

## 10.04.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

**சீரும் திருவும் பொலியச்**
**சிந்தையெலாம் மக்களிற்காய்**
**காலமெல்லாம் எமக்காக**
**காத்தளித்த சுடர் விளக்கே**
**எம் உயர்வுக்காய் பாடுபட்டு**
**எம் வாழ்விற்கு ஒளியூட்டிய**
**குலக்கொழுந்தே எம்மை**
**நெஞ்சில் தாங்கி நெஞ்சக் கோவிலாய்**
**வாழ்ந்து இறைவனடி சேர்ந்த**
**எம் தெய்வத்திற்கு**
**எங்கள் குலக் கொழுந்தின்**
**பாத மலர்களுக்கு**
**இம்மலரை காணிக்கையாய் சமர்ப்பிக்கின்றோம்**
**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

இங்ஙனம்
நீங்காத நினைவுடன்
**குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அன்னைமடியில்
14.12.1954

இறைவன்திருவடியில்
11.03.2016

# அமரர். வைத்தியகலாநிதி முருகர் நல்லையா ஸ்ரீஸ்கந்தராஜா

## திதி நிர்ணய வெண்பா

மாண்புறு மன்மத வருஷம் மாசித்திங்கள்
இருபத்தெட்டாம்நாள் சுக்கிரவாரம் தண்ணில் பூர்வபக்க
திருதியை நிறைந்த நன்னாள் இறையடி எய்தினார்.
இளவல் நல்லையா - ஸ்ரீஸ்கந்தராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
பந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

வண்டார் குழ லரிவையொடு
பிரியா வகை பாகம்
கொண்டான் மிக வானான்பிறைச்
சென்னிப் பெரு மானூர்
தண்டா மரை மலராளுறை
தவளந் நெடு மாடம்
விண்டாங்குவ போலு மிகு
வேணுபுர மதுவே.

## திருவாசகம்

உடையாள் உன்தன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்பதானால் அடியேன் – உன்
அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்
புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே!
வேறணி புவன போகமே! யோக
வெள்ளமே! மேருவில் வீரா!
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே!
ஏறணி கொடியெம் ஈசனே, உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகிற் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

வாதமொடு சூலை கண்ட மாலைகுலை நோவு சந்து
மாவலிவி யாதி குன்ம மொடுகாசம்
வாயுவுட னேப ரந்த தாமரைகள் பீன சம்பின்
மாதர்தரு பூஷ ணங்க ளெனவாகும்
பாதகவி யாதி புண்க ளானதுட னேதொ டர்ந்து
பாயலைவி டாது மங்க இவையால்நின்
பாதமல ரான திங்க ணேயமற வேம றந்து
பாவமது பான முண்டு வெறிமூடி
ஏதமுறு பாச பந்த மானவலை யோடு ழன்று
ஈனமிகு சாதி யிங்க ணதிலேயான்
ஈடழித லான தின்பின் மூடனென வோது முன்புன்
ஈரஅருள் கூர வந்து எனையாள்வாய்
சூதமகிழ் பாலை கொன்றை தாதுவளர் சோலை துன்றி
சூழமதில் தாவி மஞ்சி னளவாகத்
தோரணநன் மாட மெங்கு நீடுகொடி யேத ழைந்த
சுவாமிமலை வாழ வந்த பெருமாளே.


# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமு மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியு மிலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புத ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய மதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்தவே வந்தெ னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்குமுபாயம்
இன்புறு கருணை யினிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்து
இருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பினாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தி னீரெட்டு நிலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக வினிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி என்செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத் தினுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத் தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலை யறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அநுபூதி



1. நாநலம் பெற

பூவார் புனிதா! புவனத்தலைமைத்
தேவா! கரியின் சிரமே உளவா!
மூவாத் தமிழால் முறையே உனைஎன்
நாவால் புகழும் நலமே அருள்வாய்.

2. சொல் வன்மை பெற

வில்லாண் மையரும் விரிமா தமிழில்
வல்லாண் மையரும் வளமாய்ப் புகழும்
நல்லாண் மையது நனியே மிளிரும்
சொல்லாண் மைகொடு எந்துரியப் பொருளே!

3. கீழ்மைப் பண்புகள் அழிய

காமா திகளாம் கயமைப் பிணிகள்
போமாறு அருள்வாய் புரைதீர்த்து எனைஆள்
கோமா! கருணைக் குகனார் தமியா!
பூமா! பொலமார் புலவா! வருவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. முழு முதலை உணர

அந்தே வர்களும் அயன் மால் அரனும்
சுத்தாத் துவிதத் துறைநின் றவரும்
'கத்தா கரிமா முகத்தான்' எனவே
வித்தா ரமொடு விளம்பும் இறையே!

5. குருவாய் வந்து அருளுவான்

காவா எனைஐங் கரனே! மதுரப்
பாவா ணர்புகழ் பரமென் குருவே!
நீவா விரைவாய் நிமலன் புதல்வா!
தாவா கருணைத் தளிர்சே வடியே!

6. பேரின்பம் பெற

ஒருகொம் புடையான் உயர்மோ தகமே
விரும்பும் பெருமான் விடையோன் குமரன்
சுரும்பார் தொடையன் சுகமா குமெலாம்
அருள்வான் அருள்வான் அடியார் அவர்க்கே!

7. விதியினால் வரும் வேதனை நீங்க

பேழ்வாய்ப் பெரியோன் பெரும்பூங் கழலைச்
சூழ்வார், பணிவார், துதிப்பார் அவர்க்கே
ஊழ்வே தனைதீர்த்(து) உளமே மகிழ
வாழ்வே தரும்வல் லபைநா தனரே!

8. பேய் பூதங்களால் வரும் துன்பங்கள் அகல

பேய்பூ தமொடு பிலிசூனியமும்
பாய்வேங் கையதும் பரையின் அருமைச்
சேய்வா ரணனார் திருப்பேர் புகலப்
போய்மாய்ந் திடுமெ புனிதம் வருமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. நல்ல புலமை பெற

பல்காப் பியங்கள் பகரும் திறமும்
ஒல்காப் புகழும், உயர்செல் வமதும்
நல்காய் நலமாய் நளின மலர்த்தாள்
செல்வா! திகழ்சித் திவிநா யகனே!

10. சிறியவனும் அருள் பெற

பூந்தார் சுழல் வில் புருவம், தளிர்போல்
ஆந்தே கம்மிளிர் அணியார் இருவர்
சார்ந்தே விளங்கும் தனிமா முதலே!
தேர்ந்தே தொழுதேன் சிறியேற்(கு) அருளே!

11. புலன்களை அடக்க

வஞ்சப் புலன் என் வசமாய் நிசமாய்க்
கொஞ்சிக் குலவிக் குணமாய் மிளிர
எஞ்சித் தமதில் இனிதே உனது
கஞ்சக் கழல்வை கணநா யகனே!

12. வறுமை நீங்கிச் செல்வம் பெருக

பொல்லா வறுமை, புரைசால் கொடுநோய்
எல்லாம் ஒழித்தே எனைஆண் டிடவே
வல்லாய் வருவாய் வளமே தருவாய்
உல்லா சமிளிர் ஒருகை முகனே!

13. இப்பிறவிப் பயன் பெற்று வீடு பேறு பெற

மகத்தாய் அணுவாய் மதியாய்க் கதிராய்
செகத்தாய் அறிவாய்த் திகழ்சாட் சியதாய்
அகத்தும் புறத்தும் அகலாப் பொருளாய்
இகத்தும் பரத்தும் இருக்கும் பரமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. நிறைந்த அருளைப் பெற
கருணைக் கடலைங் கரனே! கபிலர்க்(கு)
அருளே கொடுத்தாய் அபயம் அளித்தாய்
தருவே அனையாய்! தமியன் தனைஆள்
குருவே பொறுமை குணநா யகனே!

15. அருட்பாடல்கள் இயற்ற
கற்பார் இதயக் கமலத்(து) உறையும்
அற்பார் ஒளியே! அழகுஆனை முகா!
பொற்பாய் உனது பொலந்தாள் மலர்க்கே
நற்பா கொடுத்தேன் நனிஏற்(று) அருளே!

16. செய்த பிழைகள் எல்லாம் தீர
ஆற்றல் அறியேன் அடிசெய் பிழைதீர்
சீற்றம் தவிர்வாய் திகழ்சிற் பர! யான்
சாற்றும் தமிழ்மா லைதனைத் துதிக்கை
ஏற்றே அருள்வாய்! அருள்வாய் இனிதே.

17. எல்லாப் பிறவிகளிலும் இறை எண்ணம் பெற
எந்தப் பிறப்பை எடுத்தா லும் உனைச்
சொந்தத் தமிழால் துதிசெய் திடவே
கொந்தே அலர்தார்க் குழல்வல் லபையாள்!
சிந்தைக்(கு) உகந்தாய்! சிறப்பாய் அருளே!

18. பழைய பாவங்கள் தீர
சிந்தா மணிதான் திகழ்மார் புடையாய்!
முந்தை வினையை முழுதும் தொலைத்(து) ஆள்
எந்தாய்! எளியேன் எனை நீ எழிலாய்
வந்து ஆள்! உயர் ஓ வடிவப் பொருளே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. வலிமை பெற

பகையார் அவர்மு புரமே பொடியா
நகைசெய் தபிரான் நலமாம் கனியை
வகையாய் அருள வலம்வந் தவனே!
தகையாய்! திடம்நீ தருவாய் மணியே!

20. எல்லாச் செல்வங்களும் பெற

சீரோங் கிடும்:நல் திறமும் பெருகும்:
ஏரோங் கிடுமே: இனிதாம் திடமே
பேரோங் கிடும்:நல் பெரும்வே ழமுகன்
தாரோங் கடியைத் தொழுவார் தமக்கே!

21. குழந்தைப் பேறும் செல்வமும் பெற

மகப்பேறு) அருள்வான்: மகிழ்வாய் நிதியை
அகத்தே தருவான்: அணியன்: கரிமா
முகத்தான் அடியை முறையாய் நிறையாய்ச்
செகத்தீர் தொழுமின்! தொழுமின்! தினமே!

22. நவக்கிரகங்களும் நல்லருள் புரிய

பெருமைப் பரிதி பிறை இத் தரைசேய்
அருமால் குருவே அசுரர் குரவன்
கருமை அரவூகள் இவை நலமாம்
ஒருகை முகன்பேர் உரைப்பார் அவர்க்கே!

23. மன அமைதி பெற

ஓடித் திரிவாய் உலகுஏ மும்மிக
வாடித் திரிவாய் மனனே! தகுமோ
கூடிக் குலவா ஒருகோ டனைநீ
பாடிப் பணிவாய் பணிவாய் நலமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. பயமின்றி வாழ

ஏகாக் கரனை எழில் ஐங்கரனைப்
பூகாப் பவனைப் பொறுமைக் குணனை
மாகா ளியவள் மகனை மனனே!
நீகா எனவே நிதமும் பணியே!

25. நலங்கள் பல வந்து சேர

தேடி பணிவார் சிலபேர்: சிறப்பாய்
ஆடிப் பணிவார் சிலபேர்: அணியாய்ப்
பாடிப் பணிவார் சிலபேர்: அவரை
நாடித் தருவான் நலம் ஐமுகனே!

26. பகை நீங்க

துட்டர் குதர்க்கர் தொலைந்தே பொடியாய்ப்
பட்டே இரியப் படையை விடுவாய்!
சிட்டர் புகழும் திறமே! வளரும்
மட்டில் மதமார் மழலைக் களிறே!

27. இதமான வாழ்வு பெற

விண்நீ: உடுநீ: மிளிர்வா யுவும்நீ:
மண்நீ: அனல்நீ: புனல்நீ: மதிநீ:
கண்நீ: மணிநீ: கவினார் ஒளிநீ:
எண்நீ: எனைஆள் இதம்செய் பவனே!

28. நல்ல வழியில் செல்ல

தீய நெறிநாத் திகத்தில் திளைத்தே
ஆய நெறியை அறியா திருந்தேன்
தூய நெறியின் தொடர்காட் டினைநீ
ஆயும் நெறியும் அறிவித் தனையே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. பிறவித் துன்பம் நீங்க

தொல்லைப் பிறவித் துயர்மா கடலுள்
அல்லல் வழியில் அழுந்தல் முறையோ?
செல்வா! பிரமச் செழுமா மணியே!
நல்லாய் கரைஏற் றிடும் ஐங்கரனே!

30. அறியாமை அழிய

மாயை எனும்கார்த் திரையைத் தெரிந்துஎன்
பேயை விரட்டும் பெருமான் ஒருவன்:
தாயை நிகர்த்த தனிமா முதல்வன்:
காயைக் கனிஆக் குவன்கண் ணியனே!

31. நன்மைகள் பெற

அயில்கை உளநம் அறுமா முகற்கே
மயிலூர் திதனை மகிழ்ந்தே அளித்தான்
செயிர்தீர் அடியார் சிறப்பாம் வகையில்
ஒயிலாய் நலம்தந்(து) உயர்த்தும் அவனே.

32. அர்ச்சித்து அருளைப் பெற

கரிமா முகனின் கருணை அறியார்
எரிவாய் நரகில் இடரே படுவார்:
விரிமா தவரும் விரும்பும் பெரியோன்
அரிதா அருச்சித்(து) அவனைப் புகழே.

33. எண்வகைச் சித்திகளைப் பெற

இருநான்(கு) அவதானம் எண்சித்திகளும்
பெருமான் உமையின் பெரும்பிள் ளையவன்
தருவான்! தருவான்! தரவே விரைவாய்
வருவான்! வருவான்! வழுத்தாய் மனனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. பிரணவப் பொருளை உணர

கருமால் வினையைக் களைந்தே அருளும்
திருவைந் தெழுத்தும் திகழா றெழுத்தும்
இருநான் கெழுத்தும் எமதுஐங் கரனார்
ஒருபேர் எழுத்தே: உணர்வாய் மனனே!

35. இறை எண்ணம் பெற

அளவைக் கடந்தான்: அகிலம் கடந்தான்:
உளதத் துவத்தின் உயர்வைக் கடந்தான்:
வளமாம் நிலைமேல் வசிப்பான் பெரியோன்
உளமே அறிந்துஇன் புறவே வருவாய்!

36. படித்தோர் துன்பம் நீங்க

கத்தும் தரங்கக் கடல்சூழ் புவியில்
தித்தித் திடும்செந் தமிழ்மா லைசெயூம்
வித்தர் களின் தீ வினையை விலக்கும்
அத்தித் தலையன் அருட்பார் வையதே!

37. நல்ல கவி பாட

ஆரா அமுதம் என ஆ சுகவி
சீராப் புகலும் திறமே அருள்வாய்!
தீராக் கலைகள் திகழ்வா ரிதியே!
வாராய்! வளமே வளர்வா ரணனே!

38. விநாயகனைக் கண்டு மகிழ

வேதா கமமே மிகவூம் புகழும்
பாதாம் புயனே! பணிசெய் அடியேற்(கு)
ஆதா ர!நின(து) அருட்காட் சிதர
வாதா எழில் 'ஓ' வடிவானவனே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. விநாயகனின் அருளைப் பெற

உம்பர் புகழும் உறுதிப் பொருளே!
தும்பிச் சிரனே! தொழுதேன்: தொழுதேன்:
நம்பும் எனைநீ நழுவ விடாமல்
அம்பொன் கரத்தாய் எனைஆண்(டு) அருளே!

40. குறை தீர

கவிஞன் புகழும் கவின் ஆர்தமிழ் உன்
செவிஏ றியும்நீ திருகல் சரியோ?
புவிதான் புகழும் புழைக்கைய! கரம்
குவிவேன்: மகிழ்வேன்: குறைதீர்த்தருளே!

41. அருள் மழையில் நனைய

மங்கை வலபை மணவா என் அருள்
பொங்கும் புலன் போல் பொழிந்தே புவனம்
எங்கும் நிறைந்தே இருக்கின் றதுகண்!
துங்கக் குணத்தீர்! புசியின் தொழுதே!

42. ஆணவம் அகல

மூல மலவா தனைதீர் முதல்வா!
சீல செழும்செம் சடையன் சிவனார்
பால! உயர்தற் பரனே! அருள்தா!
கோலம் மிளிரும் குணமார் பொருளே!

43. பக்குவம் பெற

சித்தி தரும்சத் திநிபா தமதே
எத்தி நமதில் எனைவந்(து) உறுமோ?
அத்தி முகவா!அருமைத் தலைவா!
சத்தி தனையா! தமியற்கு உரையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. துயரம் நீங்க

முதல்வா படவே முடியாது இனிதோ
இதமே அருளாது இருத்தல் என்ன? பொற்
பதமே உடையாய்! பணிந்தேன்! பரையின்
புதல்வா அருளாய்! புரைதீர்ப் பவனே!

45. பேரருள் பெற

சீலன் துதிக்கைச் சிரனை அனவே
ஞாலத் தினிலே நலம் ஈவர் எவர்?
கோலச் சிகிவா கனனாம் குகனும்
சாலப் புகழும் தனிமன் அவனே!

46. கவலைகள் ஒழிய

திண்தோள் சதுரும் திகழ் ஐங்கரமும்
வண்டார் குழலார் மகிழ்ந்தே மருங்கில்
பண்டே வளர்கோ லமதைப் பணிவாய்க்
கண்டேன்: களித்தேன்: கவலை இலனே!

47. ஞானம் பெற

மோன நிலையில் முழுசித் திபெறும்
ஞானம் தருவாய்! நலமார் பெரியோய்!
தீனன் எனைஆள் திருமன் கருணைத்
தேனம் எனவே திகழ்கின் றவனே!

48. பிறவி அச்சம் நீங்க

அச்சம் விடுத்தேன் அரனார் முதலோர்
மெச்சும் படியாய் மிளிர் ஐங்கர! நின்
பச்சைத் தளிராம் பதமே பலமாய்
இச்சை யூடனே பிடித்தேன் இதமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. சகல சித்திகளும் பெற

பக்தி நெறியில் பலமாய் உறைவார்
அத்தி முகனின் அடியைப் பணிவார்
முத்தி பெறுவார் முதன்மை உறுவார்
சித்தி இடைவார் திடமே! திடமே!

50. புகழைப் பெறுவதற்கு

தாதா சரணம் சரணம் தளிர்த்தாள்
நீதா சரணம் சரணம் நிகர் இல்
வேதா தரணே சரணம் மிளர் ஐம்
பூதா சரணம்! புகழ்நாற் புயனே!

51. உலகம் வாழ

ஊழி முதல்வன் உயர்வே ழுமுகன்
வாழி! திருசத் திகளும் அணியாம்
வாழி! கவினார் வாச மலர்த்தாள்
வாழி! அடியார் வளம்வா ழியவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்.நல்லையா ஸ்ரீஸ்கந்தராஜா
அவர்களின்

## வாழ்க்கை வரலாறு

நெய்தலும் மருதமும் நீர்வளமும் நிலவளமும் நிறைந்த முல்லைத்தீவு மாவட்டத்தில் தெய்வீக மணம் கமழும் திருவூர் வெள்ளா முள்ளிவாய்க்கால் அலைகடலும் சிறுகடலும் மோதும் வயல்வெளியும் சோலைகளும் நிறைந்ததுமான கல்வி அறிவில் சிறந்த பெரியோர்களும் வாழ்ந்த பூமி குருந்தடி சிவலிங்க விநாயகன் பெருங்கருணையும் ஆதி வைரவர் அருளும் ஐயனார் நாகதம்பிரான் பெருங்கருணையும் அளவிடமுடியாத சிற்றூரிலே உயர் சைவவேளாளர் மரபிலே கமக்கார முருகப்பர் பரம்பரையின் ஆறாவது தலைமுறை வாரிசாக முருகர் - நல்லையா – முத்தம்மா தம்பதிகளுக்கு மகனாக 1954ம் ஆண்டு மார்கழி மாதம் 14ம் திகதி பூமியில் ஜனனமானார். அவரின் கீழ் சந்திரமோகன் - சத்தியசீலன் - ஸ்ரீமாலதி ஆகிய மூவர் சகோதரர்களாக அவதரித்தார்கள். சிறுவயதிலேயே தனது ஆரம்பக்கல்வியை வெள்ளா முள்ளிவாய்க்கால் அ.த.க.பாடசாலையிலும் பின்பு முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திலும் பின்பு வவுனியா மகா வித்தியாலயம், நெல்லியடி கல்லூரியிலும் உயர்கல்வி பயின்று பேராதனை மருத்துவத்துறைக்கு தெரிவு செய்யப்பட்டார். பேராதனைப் பல்கலைக்கழகத்திலே பட்டப்படிப்பை மேற்கொண்டார். ஐந்து ஆண்டுவரை பல்கலைக்கழக பட்டப்படிப்பை முடித்து மருத்துவரானார். மருத்துவத்துறையிலே சத்திரசிகிச்சை நிபுணரானார்.

1986ம் ஆண்டு வவுனியா வைரவப்புளியங்குளம் Dr.சந்திரசேகரம் தம்பதிகளின் மூத்த புதல்வி சந்திரவதனியை பெரியோர்களின் ஆசியோடு திருமணம் செய்தார். இல்லறம் நல்லறமாக இருக்கின்ற பொழுது மருத்துவத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையிலே உயர்ந்த அறிவாளியாக மிளிர்ந்தார். லண்டன் சென்று மேற்படிப்பை முடித்து பல பட்டங்களையும் பெற்றார். 1995ம் ஆண்டு ஒரு பெண் குழந்தைக்கு தந்தையானார். ஆரணி அபிராமி என்று அம்பிகையின் பெயரைச் சூட்டி அன்போடு வளர்த்து வந்தார். வைத்தியராக இருந்த காலம் யாழ்ப்பாணம், அக்கராயன்குளம், மன்னார், வவுனியா, கொழும்பு பொரளை, மகரகம, நீர்கொழும்பு, களுபோவில வைத்தியசாலைகளில் இரவுபகல் பாராது சேவை செய்தார். கொழும்பு தனியார் வைத்தியசாலைகளிலும் இரவுபகல் வேலை செய்தார். பல ஆயிரம் உயிர்களைக் காப்பாற்றினார். இறுதியாக தான் பிறந்த மண்ணுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற விருப்பத்தில் முல்லைத்தீவு மாஞ்சோலை மாவட்ட வைத்தியசாலையில் பணியைத் தொடங்கினார். அவருடைய பணி 01 வருடம் முடியுமுன்னர் எல்லோரையும் ஆளாத்துயரத்தில் விட்டு விட்டு தன்பணியை முடித்துக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவன் திருவடிகளைச் சென்றடைந்த அமரர் டாக்டர் நல்லையா ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களின் வாழ்வின் ஒரு கண்ணோட்டம்.

ஈழத் திருநாட்டில், நாற்புறமும் கடலாற் சூழப்பட்டு, முல்லை மணம் கமழும் முல்லைத்தீவு மாவட்டத்தில், வெள்ளாமுள்ளிவாய்க்கால் எனும் சிறு கிராமத்தில், உயர் வேளாளர் குலத்தில், தபாற்சேவை உத்தியோகத்தர் திரு.முருகர் நல்லையா திருமதி.நல்லையா முத்தம்மா அவர்களின் மூத்த புதல்வனாக, ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தி நான்காம் ஆண்டு மார்கழி மாதம் பதின்னான்காம் திகதி டாக்டர் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் இப்பூமியில் அவதரித்தார்.

இவரது பெற்றோர்கள் திருமணமாகி மூன்று ஆண்டுகளாக குழந்தை எதுவும் கிடைக்காமையால் சொல்லொணாத் துயரமடைந்தனர். சன்னதி முருகனை நினைத்துக் கடும்தவம் புரிந்தனர். அதன் பயனாக ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் முருகனைப் போன்று அழகுடன், அவர்களின் மூத்த மகனாகப் பிறந்து தாய் தந்தையரின் நெஞ்சைக் குளிர வைத்தார். தங்களது தெய்வக் குழந்தையைத் தாயும் தந்தையும் கொஞ்சி மகிழ்ந்தனர். குழந்தை பத்து மாதப் பருவத்தையடையும் போது, தங்களது வேண்டுதலின்படியே குழந்தையை சன்னதி முருகனிடம் கொண்டு சென்று, அங்கு தமது குழந்தைக்குச் சோறூட்டி மகிழ்ந்தனர்.

வருடங்கள் நகர்ந்தன. அதன்பின்னர் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களுக்கு இரண்டு சகோதரர்களும், ஒரு சகோதரியும் பிறந்தார்கள். அவர்கள் முறையே சந்திரமோகன், சத்தியசீலன், ஸ்ரீமாலதி எனப் பெயரிடப்பட்டு எல்லோரும் ஆனந்தமாக வாழ்ந்து வந்தனர்.

ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் இளமையிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். இவர் வறிய குடும்பத்தில் பிறந்ததினால், இவ்வறுமையெனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமையை அழிக்கும் வல்லமை படைத்த ஆயுதம் கல்வி ஒன்றுதான் என்றுணர்ந்து, கல்விமீது தீவிரவெறி கொண்டார்.

ஐந்தாம் வகுப்புவரை தனது சொந்தக் கிராமமான வெள்ளா முள்ளிவாய்க்காலில் கல்வி பயின்ற இவர் பின்னர் ஆறிலிருந்து பத்தாம் வகுப்பு வரையான கல்வியை வவுனியா மகாவித்தியாலயத்திலும் மேற்கொண்டார். தான் ஒரு மருத்துவராக மேண்டுமென்ற மனவுறுதியுடன் அவர் மேற்கொண்ட படிப்பு அவருக்கு வெற்றியையும் கொடுத்தது. ஆம், அவர் மருத்துவபீடத்தில் கல்வி கற்கும் தகுதியைப் பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது கல்வியைத் தொடர்ந்தார். தான் படித்துக்கொண்டிருக்கும் அதே வேளையில், படிப்பின் பெருமைகளைச் சொல்லி தனது தம்பிமாரையும், தங்கையையும் ஊக்குவிக்க அவர் தவறுவதில்லை.

கல்வியெனும் பாதையில் தனது இலக்கை அடைவதற்கு, அவர் அல்லும் பகலும் அயராது படித்து தனது பட்டப்படிப்பை சிறப்பாக முடித்தார். இதன் மூலம் வெள்ளாமுள்ளிவாய்க்கால் எனும் சிறிய கிராமத்தில் பிறந்து, முதன்முறையாக பல்கலைக்கழகம் சென்று மருத்துவரான மாணவன் என்ற பெருமையையும் பெற்றார். இச் செய்கையின் மூலம்,

"ஈன்ற பொழுதிலும் பெரிதுவப்பாள் – தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

"மகன் தந்தைக்காற்றும் உதவி. இவன்தந்தை
என்னோற்றான் கொல் எனும் சொல்"

எனும் குறளுக்கு ஒரு உதாரண புருஷராக இவர் விளங்கினார்.

தனது மருத்துவப்படிப்பைச் சிறப்பாக முடித்ததும், யாழ் வைத்தியசாலையில் மருத்துவராகப் பதவியேற்றார். அழகிலும், அறிவிலும், நல்லொழுக்கத்திலும், சிறந்து விளங்கிய இவருக்குப் பல இடங்களிலிருந்து திருமணப்பேச்சுக்கள் வர ஆரம்பித்தன. இவருக்குப் பெண் கொடுப்பதற்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் போட்டியிட்டனர். பணத்தை வாரிக்கொடுப்பதற்குத் தயாராயிருந்தனர். ஆனால், ஶ்ரீஸ்கந்தராஜா அவர்களோ பணத்தை விட கல்வியையே பெரிதும் நேசித்தார். தனக்கு மனைவியாக வரப்போகும் பெண் நல்ல கல்வியறிவுள்ள குடும்பத்திலிருந்து வரவேண்டுமென எதிர்பார்த்தார்.

அவர் எதிர்பார்த்தபடியே, வவுனியா, வைரவப்புளியங்குளம் என்னும் இடத்திலிருந்து, அறிவும், அழகும், நல்லொழுக்கமும் நிறைந்த டாக்டர் சந்திரசேகரம், திருமதி சந்திரசேகரம் அவர்களின் மகளான சந்திரவதனி என்பவரை ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தாறாம் ஆண்டில் கரம் பிடித்தார். இவர்களுக்கு சில வருடங்களாக குழந்தைப்பாக்கியமின்றி பெரிதும் வேதனையுற்றிருந்தனர். இவர்களது பல வேண்டுதல்களினதும், முயற்சிகளினதும் பயனாக ஆயிரத்துத்தொளாயிரத்து தொண்ணூற்றைந்தாம் ஆண்டு மாசி மாதம் இருபதாம் நாளில் தெய்வக் குழந்தையாக ஒரு மகள் பிறந்தாள். அப்போது அவர்களடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அக்குழந்தைக்கு ஆரணிஅபிராமி எனச் சிறப்பாகப் பெயரிட்டு அன்பொழுக வளர்த்தனர்.

டாக்டர் ஶ்ரீஸ்கந்தராஜா அவர்கள், பின்னர் மகப்பேறு பெண்நோயியல் சம்பந்தமான சிறப்புப் படிப்பை மேற்கொள்வதற்காக இங்கிலாந்து தேசத்திற்குச் சென்றார். அங்கு தனது சிறப்புப் படிப்பை வெற்றிகரமாக முடித்த இவர், தனது படிப்பின் பயன்களை தனது தாய்நாட்டு மக்களுக்கே பயன்படுத்த வேண்டுமென்ற பிடிவாதத்தோடு, இங்கிலாந்தில் வாழ விருப்பமின்றி, தாய் நாட்டுக்குத் திரும்பினார். அவர் கொழும்பு மாநகரில் பிரசவம் மற்றும் பெண்நோயியல் துறையில் ஒரு பிரபல வைத்தியராக விளங்கினார். ஏழைகள் மீது மிகவும் இரக்கம் கொண்ட இவர், பலருக்கு இலவசமாகவே சேவை செய்தார்.

தனது குடும்பத்தின் மீதும், தாய் தந்தையர் சகோதரங்கள் மீதும், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மீதும் பெரிதும் அக்கறை காட்டுவார். கடமையில் நேர்மை தவறாதவர். இவர் தனது பதவிக்காலத்தில் கண்டி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், அக்கராயன்குளம், மன்னார், கொழும்பின் பல்வேறு பாகங்கள், நீர்கொழும்பு ஆகிய இடங்களில் சேவையாற்றினார். பின்னர் கொழும்பில் களுபோவில வைத்தியசாலையில் கடமையாற்றும் போது ஓய்வு பெற்றார்.

இவரது ஓய்வுக்காலத்தில், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாஞ்சோலை வைத்தியசாலையில் சேவையாற்றும் வாய்ப்பு இவரைத் தேடி வந்தது. எனவே தனது மண்ணின் உறவுகளுக்கு சேவையாற்றும் வாய்ப்பு கிடைத்ததையெண்ணி மகிழ்ந்து மாஞ்சோலை வைத்தியசாலைக்குச் சென்று கடமையாற்றினார். இவரது வருகையினால் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் அவர்களது மகிழ்ச்சி நிலைக்கவில்லை. மாஞ்சோலை வைத்தியசாலையில் எட்டு மாதங்கள் வரை கடமையாற்றிக் கொண்டிருந்தவேளையில், தனது உடல் நலத்தில் கவனம் செலுத்தாத காரணத்தினால் திடீரென நோய்வாய்ப்பட்டார். பின்னர் அவர் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். மறுநாள் அவர் எங்களையெல்லாம் மீளாத் துயரிலாழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்தார். இவரை இழந்துவிட்ட சோகத்தில் மக்களெல்லோரும் கன்றை இழந்த பசுப்போல கதறியழுகின்றனர். இவரது ஆத்மா சாந்தியடைய எல்லோரும் பிரார்த்திப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி

எமதுறவில் இனிமை சேர்த்த என்னருமை ராசாவே
எங்கு நீர் சென்றீர்கள் எம்மைவிட்டு – இளைப்பாறி
எமதருகிலிருந்து எல்லோரும்போல் வாழாது
உமதருமை மக்களுக்கு உதவவென்று
மாஞ்சோலை முல்லைக்கு மருத்துவராய் சென்றீரே – அன்று
உம்பிரிவு செய்திகேட்டு ஊர்மக்கள் அழுகையிலே
உம்மருமை கண்டோமே.

எனகொன்றுமில்லை நான் வருவேன் கொழும்பென்று – நீ
அபி அவளின் உயர் படிப்பை உறுதி செய்தபின் வா என்றீர் – அய்யா
எம்மை நீர் பார்த்தவுடன் உம்கண்ணில் ஒளி கண்டோம் – வதனி
காய்ச்சல் வாய்க்கு நாளை கஞ்சிகொண்டு வா என்றீர் – அந்த
கஞ்சி வாயில் போகுமுன்னே காலன்
வஞ்சித்து உம்மை வதைத்துவிட்டான்.

எமக்கேது குறைவைத்தீர் எம் அருமை ராசாவே
என்மனதை அதிர வைத்து அபி அவளை பதற வைத்து
ஏன் இந்த அவசரத்தில் இறைவனடி சேர்ந்தீரோ
என்றும் உங்கள் நினைவினிலே அபியுடனே
ஏங்கி நிற்கும் உங்கள் அன்பு மனைவி வதனி..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா...

எண்ணாண்டுகள் தவமிருந்து என்னை பெற்று எண்ணாயிரம்
கதைகள் சொல்லி வளர்த்து கண்பட்டுவிடும் என்று பொத்தி வைத்து
கண்கண்ட தேசமெல்லாம் கூட்டிச்சென்று
ஆயிரம் உறவுகளை அறிமுகம் செய்து
ஆலோசனைகள் பல இனிதாய் தந்து
அப்பாச்சி அப்பாச்சி என செல்லமாய் அழைத்து
அளவில்லா அன்பை என்மேல் பொழிந்து
வாழ்க்கை விதிகள் பல போதித்து
வாழ்க்கைச் சுமைகளையும் நன்கு விபரித்து
மனங்கலங்கும் நேரங்களில் ஆறுதல் சொல்லி
மனமுடைந்து போகாமல் என்னை பாதுகாத்து
எண்ணிலடங்கா செல்வம் இருப்பதை மறந்து
எளிமையின் சிகரமாய் கண்முன் நின்று
எப்படியும் வாழலாம் என்று வாழ்பவர் மத்தியில்
இப்படித்தான் வாழவேண்டும் என உதாரணமாய் இருந்து
தன்னிலை பாராது பிறருக்காய் பாடுபட்டு
தன்னாலான உதவிகளை அனைவருக்கும் செய்து
"என்னால் முடியும்" என்றகொள்கையோடுவாழ்ந்து
"என்னாலும் முடியும்" என என்னை எண்ண வைத்து
கல்வியின் முக்கியத்துவத்தை எனக்கு உணர்த்தி
கலங்காது இருப்பதற்கான தைரியத்தை ஊட்டி
இறுதியில் ஆறாதுயரில் என்னை ஆழ்த்தி
இறைவனிடம் சென்றுவிட்டீர்களே அப்பா.....

அன்பு மகள்

**அபி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் புலம்பல்

நான் பெற்ற ராசாவே
கண்ணே கனியமுதே
கற்கண்டே சர்க்கரையே
தேனே திரவியமே – எனைத்
தேடி வந்த பொற்குடமே.

போய் வாரேன் என்று சொல்லி
புன்னகை புரிந்தவனே – நீர்
போயொழிந்த தேசமெது
புலம்புகின்றேன் புரியாது

அம்மா என்றழைக்கையிலே – என்
அங்கம் குளிருமையா
ஆறாத துயர் தந்தாய் – என்
நெஞ்சம் கொதிக்குதையா

நித்தம் உனை நினைத்தென்
நெஞ்சம் கலங்குதையா – உன்
சத்தங்கள் கேட்பது போல்
சலனங்கள் வருகுதையா

தாய்க்குத் தலைமகனே – நான்
தவமிருந்து பெற்றவனே – இத்
தரணிக்கு வாருமையா – உன்
தாயின் துயர் தீருமையா

**அம்மா**
வவுனியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கையின் புலம்பல்

என்னாசை அண்ணாவே,
அண்ணன்மார் மூவரென்ற
ஆணவத்தில் நானிருந்தேன்
அண்ணன் பெருமைகளை
அயலவர்களுக்கும் நானுரைப்பேன் - என்

கண்ணிலொரு தூசியெனில்
கலங்கிடுவாய் அண்ணாவே - இம்
மண்ணில் உந்தன் நினைவுதனை
மறப்பதுதான் எங்ஙனமோ

உந்தன் நினைவு எங்கள்
உயிரை வருத்துதையா
உந்தன் உருவம் எம்முன்
ஒளியாய்த் தெரியுதையா

என் இல்லம் வருவாயென
ஏங்கித் தவமிருந்தேன்
உன் உள்ளம் குளிர வைக்க
உவகையுடன் காத்திருந்தேன்

வருவேன் வருவேனென
வாக்குறுதி தந்தீரே
வாராமல் போனதுமேன் - இவ்
வையகத்தை மறந்ததுமேன்.

மாலதி
சுவிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1வது தம்பியின் புலம்பல்

ஏன் அண்ணா?
சேற்றினில் மலர்ந்த செந்தாமரையே - நீ
காற்றினில் கலந்தது ஏன்?
ஆற்றினில் விழுந்த மழைத்துளிபோல் - உன்
ஆவி மறைந்தது ஏன்?

ஓடித்திரிந்த உன் திருப்பாதங்கள்
உறங்கிக் கிடப்பது ஏன்?
ஒளியது திரும்பிய உன்னிரு விழிகளில்
இருளது நிறைந்தது ஏன்?

உயிரினைக் காத்திடும் உன்னிரு கரங்களில்
விலங்கினைப் போட்டது ஏன்?
உன் துயர் மறந்து உதவிகள் புரிந்த நீ
உன்னுயிர் நீத்தது ஏன்?

சேவைகள் புரிந்து சேவகம் செய்த நீ - உன்
தேவைகள் மறந்தது ஏன்?
பாவையர் மனங்களில் பாலினை வார்த்த நீ
சாவை அணைத்தது ஏன்?

மரங்களை நாட்டி மகிழ்ந்திடும் நீயோ
மரமாய்ச் சரிந்தது ஏன்? - உன்
மகிழ்வினைக் காண நாம் விரைந்திடும்வேளை
மண்ணுடன் கலந்தது ஏன்?

மோகன்
சுவிஸ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2வது தம்பியின் புலம்பல்

என்னுயிர் அண்ணாவே,
அன்பை மட்டுமே பகிர்ந்து கொண்டாய்
ஆழமாய் உயிர்களை நீ நேசித்தாய்
இயற்கையை என்றும் நீ இரசித்தாய்
ஈன்றவள் உள்ளத்தைக் குளிர வைத்தாய்
உலகம் போற்றிட சேவை செய்தாய்
ஊருக்குள் புகுந்து உன் உயிர் துறந்தாய்
எல்லோரும் நலம் வாழ பாடுபட்டாய்
ஏழ்மையில் பிறந்த நீ மேன்மை கொண்டாய்
ஐயாவின் ஸ்தானத்தில் நீ அமர்ந்தாய்
ஒழுக்கத்தில் உண்மையாய் நீ நடந்தாய்
ஓடி உழைக்கையில் உன் சுகம் மறந்தாய்
ஔவைக்குப் பழம் கொடுத்த முருகனிடம் - உன்
ஆத்ம சாந்திக்காய் மன்றாடுவோம்.

**சீலன்**
சுவிஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடன்பிறவாத்தம்பி மணியின் புலம்பல்

எங்கள் சிறீ அண்ணா,

வன்னி மண்ணின் மைந்தனே - உன்னை
எண்ணிக் கலங்குகின்றோம்.
விடிவெள்ளி போல் தோன்றினாய் - எம்
துயர்தன்னைத் தீர்த்திட்ட சூரியன் நீ
புன்னகை பூக்கும் உன் சிரிப்பென்ன
கண்களால் கதை சொல்லும்
காவிய நாயகன் நீ

வைத்தியத் துறையில் பாண்டித்தியம் பெற்றாய்
வயிறாரச் சாப்பிட நேரமில்லை
உனைத் தேடி வருகின்ற உறவுகளுக்கெல்லாம்
உன் கைராசியெனும் மந்திரத்தால்
புத்துயிர் கொடுத்தாய்
இறுதி நேரத்தில் உறுதியுடன் புறப்பட்டாய்
உன் தொப்புள் கொடி உறவுகளுக்கு
சேவை செய்ய
உன்னைப் படைத்த இறைவன்
உன்னுயிரை எப்படிக் குடித்தான்?
படைப்பில் புதுமை செய்ய இறைவா
இறப்பில் இளமைக் கோலத்தை ஏன் கலைத்தாய்
உன் மனசாட்சியைக் கொன்றவர் யார்?
உனைத் தவிர வேறு யாரிடம் நாம் மண்டியிடுவது
இப்படியும் ஒரு கொடுமையா
எம்மால் தாங்க முடியவில்லையே.

**மணி, மாலா**
சுவிஸ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமக்கள் புலம்பல்

எம் பாசமிகு பெரியப்பா,
பெரியப்பா பெரியப்பா
பேரன்பு மிகு பெரியப்பா
பெறாமக்கள் எங்களை நீர்
பிரிந்து சென்றதெவ்விடமோ?

இலங்கைக்கு வாருங்கள்
என்றே எமை அழைப்பீர்
இணையில்லாப் பாசத்தை
எம்மீது தான் பொழிவீர்

பெட்டிகளும் கட்டிவிட்டோம் - பயணச்
சீட்டுகளும் பெற்று விட்டோம்
பெரியப்பா முகம் காண
பேராவல் கொண்டிருந்தோம்

துள்ளிக் குதித்து வந்து - உங்கள்
தோள் மீது கை போட்டு
கன்னத்தில் முத்தமிடும்
கனவுகளும் கண்டிருந்தோம்

கனவெல்லாம் பொய்த்ததுமேன் - நீங்கள்
கானலாகிப் போனதுமேன் - உங்கள்
கனிவான முகம் தன்னை - நாம்
காணாமல் போனதுமேன்?

**பிரணவன், ஸ்வேனி, கௌசி**
சுவிஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகள் புலம்பல்

என் இனிய மாமாவே,
மாமாவே மாமாவே - என்
மனம் நிறைந்த மாமாவே
மாசமொன்று இருக்குதென்று
மகிழ்ந்திருந்தேன் மாமாவே

ஓடோடி வந்து - உங்கள்
உள்ளம் குளிர வைக்க
நாள்தோறும் கனவு கண்டேன் - என்
பாசமிகு மாமாவே - உங்கள்

மடிமீது நானிருந்து
கதைகேட்ட நாட்களெல்லாம்
மனதினில் இனிக்கின்றது - என்
மதிப்பு மிகு மாமாவே

மறுபடியும் உங்களது
மதி முகத்தைக் காண்பதெப்போ
சாமியிடம் கெஞ்சுகின்றேன் - இப்
பூமிக்கு வாருங்கள்.

சுவிஸ்னி
மருமகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியையா சிறி ஐயா

பெரியையா என்று சொன்னால் அது எங்கள் குல தெய்வம் என்று சொல்வாய் அண்ணா. பெரியம்மா என்றால் நீ பிரித்துப் பார்க்கவில்லை. எங்கள் பெரியக்கா, தங்கச்சி, தம்பிமார் என்றால் பிரிவேதும் கிடையாது. பெரியப்பர் – ஆசைஅப்பர் – சித்தப்பர் பிள்ளைகள் நாம் உடன் பிறந்த சகோதரர்களாக வாழ்ந்து வந்தோம். மாமியின் பிள்ளைகளும், மச்சான்மார், மச்சாள்மார் வித்தியாசம் கிடையாது.

அன்பின் உறைவிடமே அறிவின் சிகரமே பாசத்தின் பிறப்பிடமே ஏணி என நீ இருந்தாய். எல்லோரும் மகிழ்ந்திருந்தோம். முருகர் குலம் தழைக்க வந்துதித்த முத்தே. அவனியிலே சிறந்த முத்து அரு நோய்கள் தீர்த்த முத்து. வன்னியிலே இன்றுவரை உன்னை வெல்ல எவரும் இல்லை. மருத்துவத்துறைக்கு மகுடம் நீ ஐயா – அன்பான துணைவி – அழகான பிள்ளை. பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்த தாயார். பண்பான சகோதரர்கள் அத்தனை பேர் மட்டுமா உடன்பிறவாப் பிறப்புகள் கோடிசனம் ஏனையா பிரிந்து சென்றாய். எங்கள் குலவிளக்கே தாங்கமுடியவில்லை. இதயம் வெடிக்கின்றது. துடியாய் துடிக்கின்றோம்.

ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம். ஆதிவைரவர் திருப்பாதம் அடைய வேண்டுகின்றோம். மனைவி – மகள் – தாயார் – சகோதரர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

இவ்வண்ணம்

**நல்லதம்பி குடும்பம்**

**ந.நாகராசா**

வெள்ளா முள்ளிவாய்க்கால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான பெரியப்பா...

பெரியம்மா சென்று பார்த்தவுடன்
வந்த செய்தி மூச்சு விடக் கஷ்டம் என்றும்
டாக்டர்கள் முயற்சி செய்கின்றார்கள் பயமில்லை என்று
அடுத்த நாட்காலை நாங்கள் நித்திரை விட்டெழுமுன்
பெரியப்பா செயற்கையாக சுவாசிக்கின்றார் என்று
கேட்டவுடன் நாங்களும் நிம்மதி இழந்தோம்
தவித்தோம் இறைவா எங்கள் பெரியப்பாவை
காப்பாற்று என்று வேண்டினோம் ஆனாலும்
முடியவில்லை உயிருடன் என்றாலும்
பார்ப்போம் என்று உடனே வவுனியா
புறப்பட்டோம். எனினும் உயிரற்ற அவரின்
உடலைத்தான் எங்களால் காணமுடிந்தது.
கடைசியாக அபியின் B'day இல்
கண்டோம், கதைத்தோம், மகிழ்ந்தோம்
இதுதான் நாங்கள் கடைசியாக காணும்
சந்தர்ப்பம் என்று கனவில் கூட நினைக்கவில்லை
சிறுவயது முதல் காணும் பொழுதிலெல்லாம்
நீங்கள் கூறும் புத்திமதிகள்
எங்கள் நினைவில் இருக்கின்றது. உங்கள்
அன்பு மகளுக்கு என்றும் உறுதுணையாக
நிற்போம். அதுதான் உங்கள் ஆத்மாவிற்கு
நாங்கள் செய்யும் உதவி எங்கள் அன்பு
பெரியப்பா.

பெறாமக்கள்
**பிரணவன், அஸ்வினி, பிரவீன்**
**நிரோஷி, மதனன்**
**நிவேதா, சுவேதா,**
**கிஷோக், பிரதீஷ்**
ஆரன், ஆரபி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மச்சாள்மார்

அத்தான் என்று நாம் அழைக்க
எம் குடும்பத்தில் முதல் வந்த அன்புறவே - அன்றுமுதல்
அத்தானாய், அண்ணாவாய் எம்மை ஆதரித்து வந்தீரே
இளவயதில் நாம் பெற்றோரை இழந்து நிற்கையிலே - அக்காவுடன்
எங்களுக்கு அப்பாவை, ஆசானாய் நின்றீரே - நீர்
உம் சிறு வயதுக்கதைகள் சொல்லி, எம்வாழ்வில் - நாம்
எதிர்நீச்சல் போட ஊக்குவித்த ஒளி விளக்கே.

மன்னார், யாழ்ப்பாணம்
கொழும்பு, நீர்கொழும்பு
லண்டன், மாஞ்சோலை என
எங்கு நீர் சென்றாலும் - எமை அழைத்து
இறால், நண்டு, கணவாய், ஆடு, கோழி என
அன்பாக விருந்து வைத்து அவ்வூரின் பெருமைகளை
பெரியப்பாவாய் எம் சிறார்க்கு உரைப்பவரே.

நீங்கள் மருத்துவர் மட்டுமல்ல
பொது அறிவு, தமிழ் அறிவு என
பல அறிவுப்பேராசான் - நாங்கள்
பாடசாலை, பல்கலை கழகம் படிக்கின்ற காலத்திலே
உங்கள் கேள்விகளுக்கு விடை தெரியாமல்
உங்களை கண்டதும் ஓடுவதுண்டு.

அத்தானே நீங்கள்
87ல் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் .......
93 ல் கொழும்பு - பொரெல்ல பாம்புக்கடி
போன்ற கண்டங்களில் காலனை வென்றீர்கள் - இன்று
சிறு காய்ச்சல் தந்து காலன் உங்கள் உயிர் பறிக்க
ஏன் இப்படி அமைதி ஆனீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. M.N. SRISKANDARAJAH...

நானும் Dr.M.N.ஸ்ரீஸ்கந்தராஜாவும் 1995 ஆம் ஆண்டிலிருந்து அவரின் இறுதிக்காலம் வரைக்கும் இருவரும் நெருங்கிய நண்பர்களாகப் பழகினோம். அவர் தனது வைத்தியத்துறையான மகப்பேற்று மற்றும் பெண்நோயியல் துறையில் மேலதிகப் பயிற்சிக்காக வெளிநாடு சென்று திரும்பி வந்து மீண்டும் கொழும்பில் வேலை செய்யும்போது எமது நட்பு இன்னும் பல மடங்கு நெருக்கமானது. நாங்கள் இருவரும் வெள்ளவத்தை றோயல் வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை செய்து முடித்த பின்னர், வைத்தியர்கள் இளைப்பாறும் அறையில் இருந்து நீண்ட மணிநேரம் பல விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடுவது வழக்கம். அத்துடன் நாமிருவரும் பரஸ்பரம் பல சந்தர்ப்பங்களில் வைத்தியத்துறை தொடர்பாக ஒத்தாசையாகச் செயற்பட்டும் உள்ளோம்.

உண்மையில் Dr.ஸ்ரீஸ்கந்தராஜா மகப்பேற்று மற்றும் பெண்நோயியல் துறையில் ஒரு சிறந்த வைத்திய நிபுணராகச் செயற்பட்டுள்ளார் என்பதை இங்கு நான் மனப்பூர்வமாகக் குறிப்பிட விரும்புகின்றேன். பாணந்துறை, கொழும்பு டி.சொய்சா, நீர்கொழும்பு, களுபோவிலை ஆகிய வைத்தியசாலைகளில் நோயாளிகளிடம் எந்தவித பாரபட்சமுமின்றி தனது துறைசார்ந்த சேவையை நேர்மையாகவும் சிறப்பாகவும் செய்தார் என்பதை எனக்கு மட்டுமல்ல, அவரோடு இணைந்து பணியாற்றியவர்களுக்கும் அவரின் சேவையைப் பெற்றவர்களுக்கும் நன்கு தெரியும்.

Dr.ஸ்ரீஸ்கந்தராஜாவுக்கு இயல்பாகவே தான் பிறந்த ஊர்மீது அதிகளவு பற்று இருந்தது. தென்னிலங்கையில் அவர் வேலை செய்துகொண்டிருந்த காலத்திலும் கூட தனது ஊர்மக்களுக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற அவா அவரிடம் எந்நேரமும் குடிகொண்டிருந்தது. இதனைப் பற்றி அவர் என்னிடமும் பலமுறை கூறி ஆதங்கப்பட்டிருக்கின்றார். அவரின் ஓய்வுக்காலத்தின் பின்னர் அவருடைய அந்த ஆதங்கம் நிறைவேறும் வகையில் அவருக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு - மாஞ்சோலை வைத்தியசாலையில் சிறுவேதனத்துடன் மகப்பேற்று மற்றும் பெண்நோயியல் வைத்திய நிபுணராகக் கடமையாற்றும் சந்தர்ப்பம் ஒன்று கிட்டியது. வைத்தியத்துறையில் இச்சந்தர்ப்பத்தைத் தான் பெற்ற பெரும்பேறாக எண்ணி அம்மக்களுக்கு உணர்வுபூர்வமாகச் சேவையாற்றிக்கொண்டிருந்தார். "இப்பொழுதுதான் நான் எனது சேவைப்பணியின் முழுமைப் பகுதியையும் தொட்டுக் கொண்டிருக்கின்றேன்" என்று அகமகிழ்ச்சியோடு என்னைக் கண்டு பலமுறை கூறியிருக்கின்றார்.

Dr.ஸ்ரீஸ்கந்தராஜா தனது ஓய்வுக்காலத்தின் பின்னர் முல்லைத்தீவு வைத்தியசாலையில் வேலைசெய்து கொண்டிருந்த காலத்தில் தனது சேவையில் மிகவும் சந்தோசமாக இருந்துள்ளார் என்பதை நான் பலமுறை அவதானித்திருக்கின்றேன். அந்த மட்டற்ற மகிழ்ச்சியோடு சேவைசெய்துகொண்டிருந்த காலத்தில் அவரின் இவ்வுலகப் பணிக்கு ஒரு நிறைவை வழங்கும் வகையில், அவருடைய உயிர் இவ்வுலகைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டது. இச்செய்தி என்னை மட்டுமன்றி, பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது. அவருக்கு என்ன நடந்தது? என்ற பலருடைய வினாக்களும் அவருடைய இறப்பையோ இழப்பையோ ஒருபோதும் எதிர்பாக்கவில்லை; அவருடைய சேவையை இன்னும் இவ்வுலகம் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கின்றது என்பதையே உணர்த்தி நிற்கின்றது. ஆயினும், அவருடைய இவ்வுலக வாழ்க்கைப் பயணம் முழுமை பெற்று முடிவுபெற்றுவிட்டது என்பதை நாம் உணர்ந்து, அவரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

**Dr. M.கணேசரத்தினம்,**
சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர்,
நவலோகா மற்றும் டெல்மன் வைத்தியசாலை - கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Good bye my dear friend……Sri

Never had I thought that I would be writing this in a hurry, of my dear friend Sri's obituary note, so early in his life. Never didn't I realise when I spoke to him only about 5 days before his sudden departure from this world, that I wouldn't be talking to him any more…….

Sri and I had deep rooted bonds since our early school days, O/L through to A/L, and of course then into the Campus life. It is a mixture of friendship and brotherly relationship. We would visit each other's homes, Sri coming to our home more frequently as the school was in Mullaittivu, and for the same reason Sri's parents coming to our home for a chat with our parents too... we would share meals at our respective homes and became sons to our parents. As we were the first Medical graduate entrees from our place to Peradeniya University, our relationship became even closer.

Vivid memories with Sri, having chats on Mullaittivu beach, late into the night about our life in future, and as this was in our tender age of young adulthood, therefore evolved everything one can imagine, and some of it one will be hesitant to make it public,..... all still very fresh in the mind.

Like most us, Sri also was not an angel; but it is quite likely that many would not have known the valuable, selfless good qualities which he possessed and with which he helped others without expecting anything back from them; And most importantly volunteering to intervene for others benefit despite that might put him in vulnerable position were something Sri was accustomed to but few would have aware of; during


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the height of the war in Srilanka, March 2009, when I approached him for a help for one of my Nephews, but warned him that he should think about it carefully as anyone and everyone from Mullaittivu was looked very suspiciously by Colombo, and in his position he would put him and his family in quite a trouble position, Sri's answer was, " Machchaan friendship doesn't see dangers", and thank goodness in the end he did not need to protect my Nephew either, as the situation resolved by itself; but the point was that he was prepared to take the risk in spite of the possible consequences.

Sri and I became even closer in the recent three four years, particularly after 2009; we have had the opportunity to rebuild our Mullaittivu, so got involved in forming ' Mullai Development Society' and started working with our school, as shown in the attached photo, and Sri also started working in 'Maancholai hospital'. Sri has had so many ideas and plans for Mullaittivu. He was adamant that steps should be taken to bring in the train services to Mullaittivu, was talking to relevant authorities to build a water reservoir that will trap the water which is being constantly wasted into the sea from 'Nanthi Kadal,' to make use for cultivation, was keen that we should have a good proper bus station for public use, develop a good modern hospital and most of all help the school to produce good quality students.

Of course Sri will be sadly missed by his daughter Arany Abirahmy, wife Chandravathani, his mother, his brothers and sister and many others who were closer to him, including best friends like myself and others, but I believe only some will know that his sudden early death is a great loss to Mullaittivu.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri,.... I salute you my dear friend, for all what you had done for Mullaittivu, and what we were going to do to our beloved birth place; I will try my best to carry out what you had in mind, with our friends and colleagues in Mullaittivu and I was so proud and glad when I heard that a great number of people from all walks of life from Mullaittivu in busses came to Vavuniya to attend your funeral, to show their appreciation.

I now have no one like you, to have my weekly calls about our project for Mullaittivu, but endeavour to accomplish your goals and hopefully have something in your name built so that at least some in the future generation will follow you to carry the torch to continue the improvement which you so dearly wanted.

Good bye, my friend.
Soosai.

**Dr.S.Soosainathan** MBBS FRCS(Ed) FRCS(Ed) Orth
Consultant Trauma and Orthopaedic Surgeon
West Middlesex University Hospital
UK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# On the demise of Dr. Sriskantharajah

When I entered grade V at V/ mullaitivu mahaVidyalayam in the year 1965, i saw that among the 40 boys one or two stood apart. They had bright eyes and intelligent looks. One such boy was sriskantharajah. He was one who was eager to study and was one of the best and brightest students. Not only was he studious but also a well-mannered boy. He was gentle and courteous. Whenever he met me in Colombo, he treated me with great respect- this when he was highly qualified gynecologist. He was that same humble and polite man as when he was my student

I have heard many of hisgrateful patients praise him as they told me that it was after he treated them they could become parents. He was much blessed man but always simply and humble in life

As his teacher from great 5 to GCE O/L im indeed proud of him- proud to have been his teacher.

when I heard about his demise i went all the way to vavuniya to send him off on his last journey. The crowd that thronged the funeral house bespoke his popularity. A good number of his class Mates were there and when they saw me they surrounded me. All of them were shocked and shaken up at the loss of Sriskantharajah who was a proud product of mullaitivu .

He leaves behind his wife Vathani and daughter Abirami . May the all mighty give them courage to bear this tremendous – anirreparable loss – an irremediable loss

He lives in the memory of his gratefulpatients, his family and friends. "Death Be Not proud"

**Mrs.T.V.Vijeyaratnam**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையின் மூத்த புத்திரன்

முல்லை மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் என்னும் குக்கிராமத்தில் பிறந்து இலங்கையில் புகழ்பூத்த வைத்திய நிபுணராக வளர்ந்து 61வது வயதில் இறைபதமடைந்த வைத்திய கலாநிதி M.N.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களின் சாதனைகளை மீட்டிட வரியுமில்லை. மொழியுமில்லை. அந்தவாறாக மகப்பேற்று பெண்நோயியல் வைத்திய நிபுணராகவிருந்து பற்பல பலரும் மெச்சும் சாதனைகளை புரிந்தவர் M.N.ஸ்ரீஸ்கந்தராஜா நோயாளர் உரிமையும் அவர்களது உயிரும் உளமுந்தான் ஒரு வைத்தியரின் கண்ணுக்கும் மனதுக்கும் தெரிய வேண்டிய காரியமென்பதை இறுதிவரை உணர்ந்தும் உணர்த்தியும் வந்த நிபுணன் வேகமும் விவேகமுமுடைய பழுத்த வைத்திய நிபுணர் என்பதை யாரும் மறக்கமுடியாது. அவரது வேகத்தாலும் விவேகத்தாலும் பற்பல உயிர்கள் மீண்டுள்ளமைக்கு நிறைந்த வரலாறுகள் உண்டு. நிர்வாக அலகுகளுடன் முரண்பட்டாலும் நீதியான வைத்தியத்துக்கு என்றும் மாசு செய்யாத புனிதராவார். தான் பிறந்த மாவட்டத்திலும் சேவை செய்ய வேண்டுமென்று எமது வைத்தியசாலையில் இணைந்து குறுகிய காலத்தில் அவர் சேவை செய்தாலும் நிறைவான சேவையை அக்காலத்தில் புரிந்துள்ளார். பின்தங்கிய மாவட்டமான முல்லைத்தீவில் பிறந்து மருத்துவக் கல்லூரிக்கு முதல் சென்ற இரு மாணவர்களுள் அமரரும் ஒருவர் நிறைந்த அறிவும் சமூகப்பண்பும், தேசிய சிந்தனையும் தேடலும் என்ற M.N.ஸ்ரீஸ்கந்தராஜா வாழ்வு விரைவாக சரிந்து விட்டது. அவரது ஆயுள் மேலும் பல பத்து ஆண்டுகளுக்கு நீடித்திருந்தால் எமது மாவட்ட மக்கள் நீண்ட பயனை பெற்றிருப்பார்கள். ஆனாலும் இயற்கை அதற்கு மறுத்தமை அனைவருக்குமான இழப்புத்தான் என்று கூறுவதுடன் அமரர் மனைவி, மகள், உறவுகளின் கவலையில் நானும் இணைந்து அமரர் ஆத்மா சாந்தி பெறவும் வேண்டுகிறேன்.

**வைத்தியகலாநிதி ப.தயானந்தரூபன்**
மாவட்ட பொது வைத்தியசாலை
முல்லைத்தீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திய கலாநிதி ப. சத்தியலிங்கம், மா.ச.உ.
වෛද්‍ය පී. සත්‍යලිංගම්, ප.ස.ම
Dr.P.Sathiyalingam, M.P.C

சுகாதாரம், சுதேச மருத்துவம், சமூகசேவைகள், புனர்வாழ்வு,
நன்னடத்தையும் சிறுவர் பராமரிப்பு சேவைகளும்
மற்றும் மகளிர் விவகார அமைச்சர் - வடக்கு மாகாணம்

සෞඛ්‍ය , දේශීය වෛද්‍ය , සමාජ සේවා , පුනරුත්ථාපන ,පරිවාස හා ළමාරක්ෂක සේවා සහ
කාන්තා කටයුතු අමාත්‍යවරයා - උතුරු පළාත

MINISTER FOR HEALTH, INDIGENOUS MEDICINE, SOCIAL SERVICES, REHABILITATION, PROBATION & CHILDCARE SERVICES AND WOMEN'S AFFAIRS - NORTHERN PROVINCE

Date: 30.03.2016

## முல்லை மண் ஈன்ற மைந்தன் அமரர் மகப்பேற்றியல் நிபுணர் நல்லையா சிறீஸ்கந்தராஜா.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் தந்த முல்லைத்தீவின் மைந்தன் அமரர் நல்லையா சிறீஸ்கந்தராஜா அவர்களின் மரணச்செய்தி கேட்டு மனமுடைந்துபோனேன். முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கிராமத்தில் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் அமரர் நல்லையா சிறீஸ்கந்தராஜா. "கொடுமையிலும் கொடுமை அது இளமையில் வறுமை" என்ற சான்றோர் வாக்கை சவாலாக ஏற்று தனது கல்வியை பலசிரமங்களுக்கு மத்தியில் வெற்றிகரமாக முன்னெடுத்து வைத்தியராக சாதனை படைத்தது மட்டுமல்லாது அதிலும் உச்சம் கண்ட மாவீரன்.

குடும்பத்தில் மூத்தவராக தனது இளைய சகோதரர்களுக்கும் வழிகாட்டியாக திகழ்ந்து குடும்பச் சுமையிலும் பங்குகொண்டவர். இவர் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் எமது வவுனியா மாவட்டத்திற்கும் இரண்டு வழிகளில் தொடர்புபட்டவராக திகழ்ந்தார். ஒன்று அவர் பல்கலைக்கழகம் சென்றது வவுனியா தமிழ மத்திய மகா வித்தியாலயத்திலிருந்து. மற்றையது அவர் மணமுடித்தது வவுனியாவின் முன்னணி வைத்தியராக திகழ்ந்த அமரர் சந்திரசேகரம் அவர்களின் மகளை.

கடின உழைப்பென்றால் அது அமரர் சிறீஸ்கந்தராஜாவிடமே கேட்கவேண்டும். தலைநகர் கொழும்பில் விரல்விட்டு எண்ணக்கூடிய பிரபல்யமான மகப்பேற்றியல் நிபுணர்களில் ஒருவராக திகழ்ந்த அமரர் சிறீஸ்கந்தராஜா அவர்கள் பணி ஓய்வுக்கு பின்னர் தானாக விரும்பி தனது ஊரில் கடமையாற்றவேண்டுமென மாகாண சுகாதார அமைச்சினை அணுகி ஒப்பந்த அடிப்படையில் முல்லைத்தீவில் கடமையாற்றியிருந்த போதே சுகவீனமுற்று இயற்கை எய்தினார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாரிற்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

வைத்திய கலாநிதி பத்மநாதன் சத்தியலிங்கம்,
சுகாதார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.

2nd Floor, Health Village,
Pannai,
Jaffna.

Email: [illegible]@gmail.com
Web: www.healthnp.org
Sub office
College of Nursing premises,
Mannar Road,
Vavuniya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதித் தருணங்கள்...

அமரர் நல்லையா சிறிஸ்கந்தராஜா அவர்களின் அறிமுகம் எனது திருமணத்தோடுதான் ஆரம்பித்தது. நாளடைவில் அவரது அனுபவம் தொழிற்தேர்ச்சி மற்றும் நிபுணத்துவ ஆளுமை என்பன என்னை பிரமிக்க வைத்தது.அவரது உறுதியான செயற்பாடுகளும் நெருக்கடிகளை வெற்றிகரமாக கையாளும் அவர், கடுமையாக சுகவீனமுற்ற நிலையில் அவசர சிகிச்சை பிரிவில் (EU) அனுமதிக்கப்பட்டபோது அவரை இவ்வாறு காண்பேன் என்று என்னால் அப்போது நம்பமுடியவில்லை.

மோசமான நுரையீரல் தொற்று நோயும் நீரிழிவு நோயும் கடுமையாக பாதித்து இருந்தமையால் அவர் உடனடியாக தீவிர சிகிச்சை பிரிவுக்கு (ICU) மாற்றப்பட்டார். மறுநாள் அதிகாலை 4.30 மணியளவில் என்னை தொலைபேசியில் அழைத்து என்னால் இயலாது உடனடியாக வருமாறு கேட்டுக்கொண்டார். நானும் விரைவாக வைத்தியசாலை சென்றபோது சுவாசிப்பது மிகவும் கடினமாக இருப்பதால் ஏதாவது செய்யுமாறு வேண்டினார். நான் அவருக்கு மயக்கமருந்து கொடுத்து இயந்திரமூலமான சுவாசமே ஒரேவழியென கூற அவரும் அதனை உடனடியாக செய்யுமாறு மிகவும் சிரமத்துடன் சொன்னார். அதுவே அவர் பேசிய இறுதிவார்த்தையாகும் அத்தோடு அவரது உயிரும் ஆழ்ந்த உறக்கத்தில் பிரிந்தது.

அவர் ஒரு தேர்ச்சிமிக்க பிரபலமான மருத்துவ நிபுணராக, கடின உழைப்பாளியாக பார்த்த எனக்கு அவரது மரணம் அதிர்ச்சியை தந்தது. சிறந்த திட்டமிடல், கடின உழைப்பு ஆகியவற்றால் முல்லை மண்ணிலிருந்து வந்த முதலாவது மகப்பேற்றியல் நிபுணராக பிரகாசித்தார். அவர் தன்னோடு வேலை செய்பவர்கள் மீது பற்றுறுதியையும், கடின உழைப்பையும், தொழிற்தேர்ச்சியையும் வலியுறுத்தி வந்தார். இவை அனைத்தையும் நோயாளிகளின் நலன்களுக்காகவே (Patient care)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதையும் வலியுறுத்தி வந்தார். அவர் தனது சொந்த மண்ணில் சேவையாற்றவில்லை என்ற ஆதங்கம், அவரை இளைப்பாறிய பின்னர் மாஞ்சோலை வைத்தியசாலையின் மகப்பேற்றியல் நிபுணராக சிறிதுகாலம் சேவையாற்ற வைத்தது. ஓய்வு நேரங்களில் அலம்பிலில் உள்ள தனது தென்னந்தோட்டத்தில் ஒருதொழிலாளியாக உழைத்தார். அவர் அதை பெருமையோடு தனது அன்பு மகள் அபிராமிக்கு அப்பா வியர்வை சிந்தி உழைக்கும் இடமாக அடையாளப்படுத்தினார். அவர் ஒரு நீரிழிவு, மற்றும் இருதய நோயாளியாக இருந்தபோதும் அவற்றை புறந்தள்ளி கடின உழைப்பாளியாக இருந்தார். அவரது உடல்நிலை மோசமடைந்து இருந்ததை உணர்ந்திருந்தபோதும் குழந்தைப்பேற்றிற்காக சிலவருடங்கள் காத்திருந்த சிக்கல் நிறைந்த ஒருபிரசவத்தை (Risk mother) சிறப்பாக செய்துமுடித்து விட்டே வவுனியா திரும்பினார். வவுனியாவில் இவரது உடல் நிலை மேலும் மோசமடைந்தபோதும் வைத்தியர்களின் ஆலோசனைகளை கவனத்திலெடுத்துக்கொள்ள மறந்தார். ஒருவேளை தான்செய்யும் மகத்தான தொழில் தன்னைக்காக்கும் என நம்பினாரோ தெரியவில்லை.

இன்றைய இளைய சமுதாயத்திற்கு பெரிதும் தேவைப்படுகின்ற சிறப்பான திட்டமிடல், நேர்த்தியான, கடின உழைப்பு ஆகியவற்றிற்கு முன்மாதிரியாக திகழ்ந்த அவரை (role model) வன்னி மண் இழந்து நிற்கிறது.

**Dr.ப.யோகானந்,**
பொது வைத்தியசாலை,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் நிறைந்த மாமனிதர்

வினைத்திறன் மிக்க சிறந்த ஒரு கடமை வீரர் அமரர் Dr.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் ஆக்கபூர்வமான சேவைத் திறமையால் வைத்தியத்துறையில் தமக்கென ஒரு முத்திரை பதித்துக் கொண்டவர்.

கடமை உணர்வும், சிறப்பான அணுகுமுறையும் பணிபுரியும் பணியாளர்கள் மத்தியில் அன்னாருக்கு சிறப்பான ஒரு இடத்தைப் பெற்றுக் கொடுத்தது.

கடந்த பல வருடங்களாக நாங்கள் அவருடன் நெருக்கமாகப் பழகும் வாய்ப்புக் கிட்டியது. அந்தவகையில் அவர் எங்களது நெருங்கிய ஒரு குடும்ப உறவினர் போல விளங்கினார்.

அன்னாரது பண்பும், மனம் நிறைந்த அன்பும், இயல்பாகப் பழகும் சுபாவமும், உதவும் மனப்பான்மையும் அவரை எமது உறவினரைப் போலக் கருதிப் பழகும் வாய்ப்பை எமக்கு ஏற்படுத்தித் தந்தது. அதுமட்டுமல்ல. தேவையான போது வைத்திய ஆலோசனைகளைக் கூட வழங்கியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட போதும் அவரது சேவைக்காலத்தின் பெரும்பகுதி கொழும்பிலேயே கழிந்தது. அதனால் தனது சொந்த ஊரான முல்லைத்தீவு மாவட்டத்தில் சேவை செய்ய விரும்பி சேவையிலிருந்து இளைப்பாறிய பின் கடந்த சில வருடங்களாக அங்கு பணி புரிந்தார்.

ஆனால் முழுமனதோடு விருப்பிச் சென்றும் அவரது விருப்பம் பூரணத்துவம் பெறவில்லை. ஆண்டவனின் அழைப்பு வந்துவிட்டது.

இன்று அன்னார் எம்மத்தியில் இல்லை. ஆனால், அவரது நினைவுகள் மட்டும் எங்கள் நெஞ்சில் நிழலாடுகின்றன.

அன்னாரின் பிரிவால் வேதனையுறும் அவரது அன்புமகள் அபிராமிக்கும், அவரது மனைவி மதிவதனிக்கும் எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இங்ஙனம்
அன்புடன்

இல. 11, 2/1, அர்துஷா லேன்,
வெள்ளவத்தை

**பெரியநாயகி,**
**ஸ்ரீதரன்**
**(P.K.பரமநாதர் குடும்பம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# From The Director of Royal Hospital Colombo

Dr. M. N Sriskandarajah (V. O. G) has contributed a valuable service to the Royal

Hospital for more than 20 years with dedication and responsibility.

He was always interested in the improvement of this hospital and time to time gave

valuable advice to the people concerned.

He has presented a T.V and a CD player with radio to operating theater.

In addition to this he has presented a TV to the out patients department and

involved in the refurbishment of this department.

He has done more and more successful operations in this hospital and made more

prominent to the patients.

The valuable service he has contributed to this hospital is highly commendable.

Its a big loss to this hospital as well as this country by loosing the prominent and

good hearted doctor

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வை பொன்னாக்கும் வைர வரிகள்

1. கவலையை விட்டொழிப்பதும் எரியும் ஆசையை அணைப்பதும்தான் ஓ... எவ்வளவு பெரிய விஷயம் எப்போது தான் இந்த மனம் சாந்தமும் அடைவது.

- புத்தர்

2. மனிதனை மனிதாக்குவது உதவிகளும் வசதிகளும் அல்ல இடையூறுகளும் துன்பங்களுமே.

- மத்யூஸ்

3. மன ஒருமைப்பாடுதான் வெற்றியின் ரகசியம் என்பதை அறிந்தவர்களே உண்மையில் புத்திசாலிகள். எந்த தொழில் ஈடுபட்டாலும் ஒருவனுக்கு மன ஒருமைப்பாடு இருப்பது அவசியமான ஒன்று.

- புருஷோதமானந்தர்

4. நிம்மதியை தேடி அலைவதில் பயனில்லை அது உங்கள் நெஞ்சுக்குள்ளே இருக்கிறது.

- பாரதிதாசன்.

5. வெற்றியை விட தோல்விதான் அதிக பாடங்களை கற்றுத்தருகின்றது.

- கார்ல் பெநிக்கர்.

6. எல்லோர் இடத்திலும் சம அன்பு கொள்ளுதல் மிகக்கடுமையான ஓர் ஒழுக்கம் ஆகும் ஆனால் இந்த ஒழுக்கம் இன்றி முத்தி கிடையாது.

- சுவாமி விவேகானந்தர்

7. துன்பத்தை அனுபவித்த காலத்தை மறந்துவிடு அனால் அது உனக்கு கற்பித்த பாடத்தை மறந்து விடாதே.

- அப்துல் கலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பிடித்த காரியத்தை செய்ய வேண்டும் என்பதை விட செய்யும்காரியத்தை நமக்கு பிடித்ததாய் மாற்றிகொளவேண்டும்.

- சேக்ஸ்பியர்

9. எளிமையாய் இருப்பது கடினம் ஆனால் அதைவிட மகிழ்ச்சி தருவது வேறொன்றும் இல்லை.

- காந்தி அடிகள்

10. பேச்சு பெரியது ஆனால் மௌனத்தின் மொழி அதைவிட பெரியது.

-கிருபானந்த வாரியார்

11. நீராவி போன்றது புகழ் வந்த வேகத்தில் ஆவியாகிவிடும்.

- ஆபிரகாம் லிங்கன்

12. கோபம் என்னும் தீ தன்னையும் தன்னை சேர்ந்தவரையும் அழித்துவிடும்.

- திருவள்ளுவர்

13. வெற்றி என்பது உன் நிழல்போல் நீ அதை தேடிப்போக வேண்டியதில்லை நீ வெளிச்சத்தை நோக்கி நடக்கும்போது அதுவே உன்னிடம் வரும்.

- அப்துல் கலாம்

14. சந்தோசத்தைவிட கஷ்டங்கள் மனிதனுக்கு நிறைய நல்ல படிப்பினைகளை சொல்லிக்கொடுக்கின்றன.

- சுவாமி விவேகானந்தர்

15. நல்ல நூல்ககளை நாள்தோறும் வாசிக்கும் பயிற்சியை ஏற்படுத்திக் கொள்ளுங்கள் கோணலான மனமும் நேராவுவதற்கு இப்பயிற்சி உதவும்.

- வாரியார் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 1954 12 14



உதிர்வு 2016 03 11

## வைத்திய கலாநிதி M.N. சிறிஸ்கந்தராஜா

**MBBS, MCOG FCOG (SL)**

**(மகப்பேற்று பெண் நோயியல் வைத்திய நிபுணர்)**

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் கிராமத்தில் பிறந்த
இலங்கையின் பெயர் குறிப்பிட்டு சொல்லக்கூடிய முதன்மையான
பிரபலமான மகப்பேற்று பெண்நோயியல் மருத்துவ நிபுணர்களுள்
ஒருவராக எமது மாவட்டத்துக்கு பெருமை சேர்த்த மூத்த வைத்திய
நிபுணரான வைத்திய கலாநிதி M.N சிறிஸ்கந்தராஜா அவர்கள்
தனது வாழ்நாளில் தான் பிறந்த மண்ணுக்கு எப்படியாவது
தனது மருத்துவப்பணியை செய்துவிட வேண்டும் என்ற
அவாவுடன் வந்து எமது வைத்தியசாலையில் தன் பணியை
தொடர்ந்து கொண்டிருந்த வேளை ஏனோ காலன்
அவரை எம்மிடமிருந்து பிரித்துவிட்டான்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன்
அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்
வைத்தியசாலைச் சமூகம்.

மாவட்ட பொதுவைத்தியசாலை
முல்லைத்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் காணிக்கை



மலராக 14 12 1954

சருகாக 11 03 2016

வெள்ளாம் முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவை பிறப்பிடமாகவும்,
117 குருமன்காடு, மன்னார் வீதி, வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் வைத்திய கலாநிதி
## நல்லையா-ஸ்ரீஸ்கந்தராஜா

சாகாமல் இருப்பதென்பது சாத்தியமில்லைத்தான்
ஆனால் வாழ்வு முடியாமல் போனதேன்.....

எங்கள் இதயம் எல்லாம் நீ நிறைந்தாய்
மனிதம் என்றாலே நீதான் என்று வாழ்ந்தாய்

உன் இழப்பை எப்படி தாங்கிக் கொள்வோம்
கண்ணீரோடு காத்துக் கிடக்கிறோம்.....
மீண்டும் ஓர்நாள் பிறந்து வா......

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சின்னத்தம்பி நவரத்தினராசா குடும்பம்
வெள்ளாம் முள்ளிவாய்க்கால்,
முல்லைத்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் பூக்கள்

பிறப்பு
14
12
1954



இறப்பு
11
03
2016

## அமரர் வைத்திய கலாநிதி நல்லையா சிறிஸ்கந்தராசா

முல்லைமண் பெற்றெடுத்த முத்தாக மிளிர்ந்து
முள்ளிவாய்க்கால் தனை பதியாகக் கொண்டு
முல்லை ம.வி யில் கல்வியை கற்று – மேல் நிலை பெற்று
மாஞ்சோலை தன்னில் வைத்திய நிபுணராகி
வையகம் புகழ வாழ்வாங்கு வாழ்ந்தீர்.
வைகலில் கேட்டோம் வருத்தும் செய்தியதை
வருந்தித் துடிக்கின்றோம் எம் பழைய மாணவன் வைத்தியரை இழந்து
கடவுளுக்கும் காலனுக்கும் கருணை இல்லையோ
கணப் பொழுதில் எமைவிட்டு விண்ணுலகம் சென்றதேனோ
ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் துயரையும் பகிர்ந்து கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம்
முல்லைத்தீவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரை காணிக்கையாக்குகின்றோம்

அன்னை மடியில்
1954 * 12 * 14



ஆண்டவன் மடியில்
2016 * 03 * 11

## அமரர். முருகர் நல்லையா சிறிஸ்கந்தராசா

**மகப்பேற்று சத்திரசிகிச்சை வைத்தியநிபுணர் மாஞ்சோலை மாவட்ட வைத்தியசாலை முல்லைத்தீவு**

முழு உலகும் உன்னிப்பாய் நோக்குகின்ற
முள்ளிவாய்க்கால் பெற்ற தலைப்புதல்வர் நீர்
முல்லை மகா வித்தியாலய – இடைநிலை கல்வியுடன்
வன்னிப் பெருநகர் வவுனியா மகா வித்தியாலய உயர்தர கல்வியோடு
பல்கலைக்கழகம் தன்னில் வைத்திய கல்வியோடு – பட்டத்துடன்
பலபேரும், நாடு போற்றும் நிபுணராகி
தென்னிலங்கை பெரும் வைத்தியசாலைகளிலும்
வட இலங்கை தலை நகரிலும், வவுனியாவிலும் சேவையாற்றினீர்

ஓயாது உழைத்து உமக்கென ஒரு பெயர் பெற்றீர்
ஓய்வுக்காலமதில் – பிறந்த மண்ணுக்கு சேவை செய்ய – வந்த
மண்ணின் மைந்தா உம்மிழப்பு எம்மை வாட்டுகிறது
மரணித்துப் போனாலும் மாண்புடன் உம் பெயர் நிலைக்கும்
கல்வி கற்ற கலைக்கூடமாம் முல்லை மகா வித்தியாலயத்தை
கவனித்துச் சீராக்க – உம் நண்பர் பலரை
கடல் கடந்த தேசத்திலும், உள்ளூரிலும்
கண்ணியமாய் ஒன்று கூட்டிய கனிந்த மனத்தவரே

எம் நாட்டு மூத்த கல்வியாளரை ஒன்று கூட்டி
எம் பள்ளி வளர்ச்சிக்கு உரமூட்டியவரே
பல்கலைக்கழகம் செல்லும் பாமர மாணவர்களுக்கு
பண உதவியுடன் பலபக்க கல்வியையும் ஊட்ட எம்மை அழைத்தீர்
மூத்த பழைய மாணவர் அமைப்பான – முல்லை
மகா வித்தியாலய கல்வி அபிவிருத்தி மேம்பாட்டுக்கழகத்தின்
நல்ல போசகராய் நின்று – எமை
வழிகாட்டிய அறிவு நிறை வள்ளலே

உம் இழப்பு கண்டு ஊரே இரங்குகின்றது
உரிய மகப்பேற்றாளன் இல்லையென ஏங்குவோர் பலர்
உமக்காய் உம் நண்பர் கூட்டம் – மனமுருகி
உணர்வு பொங்க வழங்கும் கண்ணீர காணிக்கை இதுவாகட்டும்.

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

13.03.2016

**முல்லைத்தீவு மகாவித்தியாலய சிரேஷ்ட**
**பழைய மாணவ நண்பர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் அஞ்சலி

பிறப்பு
1954
⁂
12
⁂
14



இறப்பு
2016
⁂
03
⁂
11

முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலை மகப்பேற்று மற்றும்
பெண்நோயியல் வைத்திய நிபுணர்

## அமரர். முருகர் நல்லையா சிறிஸ்கந்தராசா

முல்லைத்தீவு மாவட்டம், முள்ளிவாய்க்கால் கிழக்கினில் முருகர் நல்லையா முத்தம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனாக 14.12.1954ல் பிறந்த உமக்கு சிறிஸ்ந்தராசா எனும் அழகிய பெயரினை தெரிந்து வைத்து பார்புகழும் மருத்துவ நிபுணத்துவம் மிக்கவராய் திகழ்ந்தீர். கல்வியை கருத்துடனே கற்றுயர்ந்து, தலைமகனாய், தம்பியரையும், தங்கையையும், வழிநடத்தி வாழ்வில் உயரவைத்தீர்! வைத்திய துறைதனில் நாடளாவிய ரீதியில் முதல் வரிசை மகப்பேற்று நிபுணனாய் மிளிர்ந்து வந்தீர் இசைத்துறையிலும், கலைத்துறையிலும், அத்தோடு பயிர் வளர்ப்பிலும் பேருவகையுடன், பெருந்தோட்ட உரிமையாளனுமாய் உயர்ந்தீர் ஓய்வுக்குப் பின்னரும் ஓய்வில்லா உழைப்பாளராக உத்வேகத்துடன் உழைத்து சாதனைகள் பல புரிந்தீர் கல்வியில் உயர வைத்த முல்லைத்தீவு மகா வித்தியாலய வளர்ச்சிக்கு உன்பணி மகத்தானது! வளங்கள் பல இருந்த போதும் கோடுகீறி வாழாது, பலருடனும் பழகி அரவணைத்து, கடமையிலே கண்டிப்பாயும், கொண்ட கொள்கையிலே பிடிப்பாகவும் பாசத்தினை பதுக்கி வைத்தும் பணி பல புரிந்தீர். 10ம் ஆண்டு முதல் பள்ளித் தோழருடன் அன்று போல் இன்று வரை பற்றுடனே பழகி வந்தீர் அமரர் சிவசிதம்பரம், அமரர் செல்லத்தம்பு, அமரர் சிங்காரவேலு வரிசையிலே முல்லையின் பெயர் சொல்லும் நிபுணனாகி முல்லையின் வளர்ச்சியிலே, மலர்ச்சிபெற அயராது நீயுழைத்து. பல்துறையினருடனும் உறவாடி பதிவுகளாக்கினீர் அப்துல் கலாம் போல கனவு பல கண்டுரைத்தீர். பாதி வழிதனிலே காலனும்மைக் காவுகொண்டதனை ஏற்க மறுக்கிறது எம்முள்ளம் பரிதவித்து நிற்கிறோம்!

**அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் சிந்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

அன்னாரது நண்பர்கள்
அன்ரனி, கனகசபை, ஞானேந்திரர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1954 | 2016 |
| 12 | 03 |
| 14 | 11 |

முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலை பிறப்பிடமாகவும்
கொழும்பு வெள்ளவத்தை புகையிரத நிலைய வீதியை வசிப்பிடமாகக் கொண்ட

அமரர் வைத்திய கலாநிதி

## நல்லையா சிறீஸ்கந்தராஜா

(சிறி அண்ணா)

உலகினில் உயர்ந்த வாழ்வில்
உத்தமராய் வாழ்ந்தீர்
நலமிகு குணங்கள் கொண்டு
நெஞ்சைவிட்டகலாத
ஞாபகங்கள் பதிந்து
கண்ணிமைக்கும் பொழுதில்
எம்மைவிட்டு நீர் பிரிந்ததுதான் ஏனோ?
உம் நினைவுகள் இங்கே
நிலைத்து இருக்க.
தேடித்தேடி உறவுகள் அழ
திகைத்தே நாங்கள் சோர்ந்துபோய்
உங்கள் பிரிவை எண்ணி
பதைபதைத்து தவிக்கின்றோம்......

ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சரோஜினி சிதம்பரம்பிள்ளை குடும்பத்தினர்
M.S. வீதி, கோவில் புதுக்குளம், வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் டாக்டர் ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களின்

# வம்சவிருட்சம்

முருகேசபிள்ளை
நல்லையா + முத்தம்மா

- Dr.ஸ்ரீஸ்கந்தராஜா
- சந்திரமோகன்
- சத்தியசீலன்
- ஸ்ரீமாலதி

Dr.யோவான்பிள்ளை
சந்திரசேகரம் + பாக்கியம்

- Dr.சந்திரகுமார்
- சந்திரவதனி
- சந்திராதேவி
- தயாளினி
- இந்திரகுமார்
- சாந்தினி
- நந்தினி
- சுகந்தினி

Dr.ஸ்ரீஸ்கந்தராஜா + சந்திரவதனி

- ஆரணி
- அபிராமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

எங்கள் அன்புத் தெய்வம், குடும்பத் தலைவன் சுகயீன முற்றிருந்த போது வந்து பார்த்து ஆறுதல் கூறியோருக்கும் இறையடி சேர்ந்த செய்தி கேட்டு உடன் விரைந்து வந்து உதவிய அன்பர்களுக்களுக்கும், நேரில் வந்து அனுதாபமும், ஆறுதல்கள் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி, தொலைநகல் மூலம் ஆறுதலும் அனுதாபமும் தெரிவித்த வெளிநாட்டு உறவுகளுக்கும், மலர்வளையம், பதாதைகள், அஞ்சலிப்பிரசுரம் என்பவற்றின் வாயிலாக அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இறுதிக்கிரியையின் போது, கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திய அனைத்து அன்புக்குரியவர்களுக்கும், இந்நூலினை சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய வாணி கணனிப்பதிப்பகத்தினருக்கும், இன்றைய ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனை உபசாரத்தில் கலந்து கொண்ட பெருந்தகைகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



இங்ஙனம்

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய உலக நிலை

தருக்கும் செருக்கும் தலைக்கு ஏறி
மன்னர்களும்
மன்பதையும்
மாபாதங்களை
மனா மாப்பில் புரிந்ததனால்

தாங்கொணா பாவச் சுமையை
தாங்க வல்லேன் என்று
மண் மடந்தை - திரு
மாலிடம் சென்று
மனம் குமுறியதால் தான்

கரியாமல்
ககனம் வீட்டுக்
கண்ணனாக
காசியினில் அவதரித்தான்.

மறத்தை மயக்கவே
மானிடச் சட்டையை
மனம் ஒப்பி அவன் தரித்தான்



பாரதப்போரில்
பரதனுக்கு உதவி
பாருளோருக்கு என்றும் உதவி
பாதுகாப்பு அமைச்சர் கடமை



வாணி கணனிப் பதிப்பகம். தொ.பே: 024 2223658

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org